கனரா வங்கி केनरा बैंक Canara Bank

ஓர் இந்திய அரசு நிறுவனம் भारत सरकार का उपक्रम A Government of India Undertaking

சிண்டிகேட் सिंडिकेट Syndicate

# ஆலோசனை

## வருமான வரித்துறையிலிருந்து அனுப்பப்பட்டதைப்போன்று தோற்றமளிக்கு போலியான குறுஞ்செய்திகளை கையாளுவதில் ஜாக்கிரதை!!

- மோசடி நபர்கள் முக்கியமான தகவல்களைத் திருடும் நோக்கில், வருமான வரித்துறையிலிருந்து அனுப்பப்பட்டதைப் போன்று தோற்றமளிக்கும் சில இணைப்புகளை(links) அனுப்பியும் மற்றும் அத்தகைய இணைப்புகளை(link) கிளிக்(Click) செய்வதன் மூலம் வங்கிக் கணக்கினை சரி பார்த்து வருமான வரி தொகையை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என போலியான குறுஞ்செய்திகளை(Messages) அனுப்புகின்றன.
- இத்தகைய குறுஞ்செய்திளில் வரும் இணைப்புகள், வருமான வரி தாக்கல் இணைய பக்கம் போன்று தோற்றமளிக்கும் வலைத்தளத்திற்குப் பயனாளரை திசை திருப்பலாம் அல்லது அத்தகைய மோசடி இணைப்புகளை(links) கிளிக்(Click) செய்வதன் மூலமாக, பயனாளர்கள் தங்களின் முக்கியத் தகவல்களாகிய, பயனாளர் பெயர் (User Name) மற்றும் கடவுச்சொல் (Password), கடன் அட்டை விவரங்கள்(Credit card details) மற்றும் இதர விவரங்களை சமர்ப்பிக்க வலியுறுத்தலாம்.

.

> அன்புள்ள ஐயா,
> வருமான வரித்தொகையான Rs.15,490/- யினை திரும்பப் பெறுவதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தொகை தங்கள் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும். தயவு செய்து தங்களது கணக்கு எண் 5XXX XXX 4678 –ஐ சரி பார்க்கவும். இது தவறாக இருக்கும் பட்சத்தில், கீழ்க்கண்ட இணைப்பினை(links) கிளிக்(Click) செய்தது உங்கள் கணக்கின் விவரங்களை சமர்ப்பிக்கவும்




## இத்தகைய குறுஞ்செய்தி வந்தால் என்ன செய்ய வேண்டும்?

வருமான வரித்துறையிலிருந்து அனுப்பப்பட்டதை போன்று தோற்றமளிக்கும் மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்திக்கு எப்போதும் நேரடியாக பதிலளிக்க வேண்டாம்.

எந்தவொரு இணைப்பினையும் திறக்கும் போது மிகுந்த ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். ஏனெனில், அத்தகைய இணைப்புகள் உங்களது கைபேசி அல்லது கணினியைப் பாதிக்கும் குறியீட்டினை கொண்டிருக்கக் கூடும்.

மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தியுடன் வரும் இணைப்புகளை கிளிக் செய்யும் போது மிகுந்த எச்சரிக்கையாக இருங்கள். மேலும், உங்கள் வங்கிக் கணக்கு எண், கடன் அட்டை விவரங்கள் போன்ற இரகசியத் தகவல்களைத் தெரிவிக்காதீர்கள்

வருமான வரியினைத் திரும்பப் பெறும் நிலையினைப்(Status) பற்றிய தகவல்களை அறிய, வருமான வரித்துறையின் அதிகாரபூர்வமான இணையத் தளத்திற்கு செல்வதே சிறந்த வழியாகும்.